2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்கட்சியைச் சேர்ந்த முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் நடந்த அந்தக் கொலை குறித்து, ஹக்கீம் என்னும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் கொலை செய்யப்பட்டதைக் குறித்து நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைக்கும்கூட இப்படித்தான் விவாதம் நடந்தது. செய்தியே இப்போதுதான் கிடைத்திருக்கிறது, என்னிடத்திலே முழு விவரம் இல்லை. அதை முறைப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக, முன்கூட்டியே உரிய நேரத்தில் கொடுத்தால், நாளைக்கு முறைப்படி எடுத்துக்கொண்டு விவாதிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹக்கீம் அவர்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆர். எஸ். எஸ். தோழர்கள் கைது செய்யப்பட்டால் அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. கைது செய்யப்பட்ட கலைச்சோலை மணி என்பவருக்கும் ஆர். எஸ். எஸ்.க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் நகர காங்கிரஸ் கமிட்டியினுடைய செயலாளர். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். நிச்சயமாக அவருக்கும் இந்த இயக்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. எனவே அதை எழுப்புகிறேன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு இது தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிற போது உரியவர்கள் அதைப் பற்றிப் பேசலாம்.

4. கவன ஈர்ப்பு.

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு, நிலம் இழந்தவர்களுக்கு நிவாரண அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இ. புகழேந்தி, ஏ. கணேசமூர்த்தி, மு. இராமநாதன், டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன், சி. கோவிந்தராஜன், மற்றும் கோ. பூவராகன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. ஏ. கணேசமூர்த்தி.

[1989 ஏப்ரல் 4

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால்-வீடு, நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளும் வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளை, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்காதது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கப் பணிக்கு தேவைப் பட்ட நிலத்தைக் கொடுத்ததால் வீடு நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளும் வேலை வாய்ப்பு ஏற்பாடுகளும் கொடுக்கப் படவில்லை என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவை யிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

நெய்வேலி நிர்வாகத் தலைவர் டாக்டர் மஜீத்சிங் அவர்கள் என்னை 31—3—1989 அன்று சந்தித்தபோது இந்தப் பிரச் சினைக்குறித்து அவர்களிடத்திலே விளக்கமாகப் பேசி இருக் கிறேன். இப்போதுள்ள பிரச்சினை நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தின் விரிவாக்கப் பணிக்கு உடனடியாக நிலமும் தேவை, அதேசமயத்தில் அதன் மூலம் நிலம் வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடும், வேலை வாய்ப்பும் தரப்பட வேண்டும் என்பதும் தேவை.

(முற்பகல் 10-30)

நிர்வாகத்தின் தலைவர் என்னை சந்தித்த சமயத்தில் உடனடி யாக காலிசெய்யப்படவிருக்கும் தெற்கு வேலூர் வேப்பங்குறிச்சி பழைய நெய்வேலியைச் சேர்ந்த பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 5 சென்ட் வீதம் அவர்கள் கோரும் இடங்களில் வீட்டு மனையும், தற்போது காலி செய்யப்படும் வீடுகளைச் சார்ந்தவர்களுக்கு சுமார் 500, 600 பேர்களுக்கு வேலை வாய்ப் பும் நிர்வாகம் அளிக்க முன்வர வேண்டும் என்று அவர்களிடத் திலே கூறியுள்ளேன். இதனை இப்போது மாத்திரம் நான் கூற வில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே கூட இந்தப் பிரச்சினை குறித்து என்னிடத்திலே மனு ஒன்று தரப்பட்டபோது, அதைப் பற்றி, கழகம் ஆட்சிக்கு வருமேயானால் ஆவன செய்யப்படும் என்று உறுதியளித்திருக்கிறேன். அந்த அடிப்படையில் தொடர்ந்து நிர்வாகத்தினரோடு பேசி, அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்டு உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பொது முக்கியத்துவமும், அவசரமும் வாய்ந்த பொருள்களை இந்த அவையிலே கூற விரும்புகிறேன். 1979–80 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுக்கு ஒரு வினா என்ற அடிப்படையில், ஒரு வினா தொடுக்கவும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் தேவைப்பட்டால் கேட்கலாமே தவிர, கேட்டேதான் ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் விரும்பினால் கேட்கலாம். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போதும் எந்த பேச்சாளரையும், விரும்பாவிட்டால் நான் வற்புறுத்துவது இல்லையே.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, வீடுகள் நிலங்கள் கொடுத்தவர்களுக்கு நீதிமன்றங்கள் அடிப்படையில் ஈட்டுத்தொகை வழங்க வேண்டும், வழங்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நீதிமன்றங்களைக் குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் நிர்வாகத்தினரோடு கலந்து பேசி தக்க நிவாரணங்களை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியைத் தான் என்னால் அளிக்க இயலும்.

*திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் 56வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தோடு இணைத்து வந்திருக்கிறது. பிரச்சினை என்னவென்று சொன்னால் அங்கிருக்கக் கூடிய விவசாயிகள் ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னதாக அந்த நிறுவனத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத்தொகையாக கொடுத்தது 2,000மும் 7,000மும். பக்கத்தில் இருக்கக்கூடிய நிலத்தினுடைய மதிப்பு 60,000 ரூ. ஆகவே அவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் அந்த விவசாயிகள் சார்பு நீதிமன்றத்திற்கு கடலூருக்கும், விருத்தாசலத்திற்கும் சென்றார்கள். அந்த நீதி மன்றம் 45,000 சில நிலங்களுக்கும், 65,000 சில நிலங்களுக்கும் அளித்துத் தீர்ப்பு அளித்தது. அதைவிட்டு உயர்நீதிமன்றத்திற்கு வந்த பிறகு உயர் நீதிமன்றமும் அந்தத் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தியது. அந்த நஷ்டஈட்டுத் தொகை மட்டுமல்ல 30 சதவிகிதம் ஆறுதல் தொகையும், அது கொடுபட வேண்டிய காலத்திலிருந்து 9 சதவிகிதம் வட்டியும் சேர்த்து கொடுக்கப்பட

வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. இதனால்தான் அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பூராவும் மனம் வருந்தி பல்வேறு கிளர்ச்சிகளிலே இறங்கினார்கள். இன்றைக்கு வந்திருக்கக்கூடிய நிறுவனத் தலைவர் நஷ்ட ஈடு எதுவும் கொடுக்க முடியாது என்றும்—இடையிலே வேலை பிரச்சினை என்று ஒன்று வந்தது. வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று. அதற்கென தனிப்பட்ட முறையிலே நேர்முகத் தேர்வுகளும் நடந்துவிட்டன. வீட்டை இடித்துவிட்டு வந்தால் தான் கொடுப்பேன் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இன்றைக்கு வந்திருக்கும் நிறுவனத்தலைவர் நஷ்ட ஈடும் கொடுக்க முடியாது—வேலை கொடுப்பது என்பதும் எளிதல்ல என்று அறிக்கையே விட்டிருக்கிறார்கள். எனவே அங்குள்ள பிரச்சினையை முதலமைச்சர் கூறிய மாதிரி 5 சென்ட் நிலம் என்று பொதுவாகச் சொன்னால் மட்டும் போதாது. அவர்கள் அத்தனை பேரும் ஏழை விவசாயிகள். 10 ஆண்டுக் காலமாக அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு வந்தும் 4 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இதற்கு உரிய முறையிலே அந்த விவசாயிகளையும், நிறுவனத் தலைவரையும் அழைத்து ஒரு நியாயமான நஷ்ட ஈட்டை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலே நான் அளித்த விளக்கத்திலே அதைத்தான் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து அதற்கான ஏற்பாடுகள் அரசின் சார்பில் செய்யப்படும்.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அளித்த விளக்கத்திலிருந்து, நெய்வேலி இயக்குநர் அவர்கள் இங்கே வந்து பார்த்தார்கள் என்றும், அவர்களுடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அவர்கள் வந்து பார்த்தது, உடனடியாக அவர்களுக்கு இடம் வேண்டும்; அதை மட்டும் நீங்கள் காலிசெய்து கொடுங்கள் என்று கேட்டிருப்பதாக நான் அறிகின்றேன். அவர்கள் எப்போதுமே இந்தப் பிரச்சினைக்குப் போவதில்லை. நானும் 25 ஆண்டுகளாக நெய்வேலியைச் சுற்றி, என்னுடைய கிராமம் பக்கத்திலே இருப்பதனாலேயும் அவர்கள் காரியங்கள் செய்கின்றதை தொடர்ந்து அறிந்து வருகிறேன். எப்போதெல்லாம் பிரச்சிதனைகள் வருகின்றனவோ, அப்போது, நம்முடைய முதல்வர்களை, ஆட்சியிலே இருப்பவர்களை அணுகி அவர்களுடைய கோரிக்கையை சாதித்துக் கொள்கிறார்களே தவிர, நிரந்தரமாக அந்த வட்டாரத்திலே இருக்கின்ற விவசாய மக்களுக்கு, நிலத்தை அளிக்கின்ற மக்களுக்கு ஒருவிதமான பயனும் அளிப்பதில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து, எல்லோரையும் அழைத்து வைத்து, எங்களையும் சேர்த்து வைத்து இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. மஜீத் சிங் என்ற நிர்வாகத் தலைவர் அவர்கள் என்னை வந்து சந்தித்தபோது அவர்கள் ஏதோ அந்த இடத்தை ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று கேட்பதற்காக மாத்திரம் வந்ததாகச் சொன்னார்கள். அவர்கள் இப்போது புதிதாகப் பொறுப்பேற்றிருப்பவர்கள். அந்த முறையிலே ஒரு மரியாதை சந்தப்பிற்காக வந்தார்கள். அதை நான் பயன்படுத்திக்கொண்டு, அங்கே பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய பிரச்சினைகளை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அவர் என்னிடத்திலே குறிப்பிட்டது, இப்போதுதான் புதிதாக வந்து இருக்கிறேன். இந்தப் பிரச்சினை முழுவதும் எனக்குத் தெரியாது, எவ்வளவு சாதகமாக இந்தப்பணியை என்னால் ஆற்ற இயலுமோ அந்த அளவிற்குச் சாதகமாக ஆற்றுகிறேன் என்று கூறி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கைகளை மக்களுடைய கோரிக்கைகளை அவர்களிடத்திலே எடுத்துக் கூறலாம். அவர்களுக்கு உதவியாக அரசும் நிச்சயமாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்களை நிச்சயமாக அரசும் பரிதவிக்கவிடாது என்ற உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த கருத்தினுடைய அடிப்படையில் மக்களுடைய பிரதிநிதிகளும், விவசாயிகள் சார்பிலே, அதாவது பாதிக்கப்பட்ட அந்த நில உடைமையாளர்களுடைய சார்பிலேயும் அரசினுடைய சார்பிலேயும் முத்தரப்பு என்கின்ற அளவிலே ஒரு குழுவை அமைத்து அவர்களுக்குச் சரியான நியாயங்கள் கிடைக்கவும், வேலைவாய்ப்புக்களோ அல்லது வீடுகள் இழக்கக்கூடியவர்களுக்கு உண்டான நஷ்டஈடோ அல்லது மாற்று இடம் என்கின்ற முறையிலே முதல்வர் சொன்னது போல, 5 சென்ட் இடம் என்கின்ற அளவிற்கு இடமோ அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு, முத்தரப்புக் குழுவை அரசு அமைக்குமா? அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் போல, ஒரு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை முடிக்கலாமா என்ற கருத்தையும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பொதுக் கூட்டத்தில் மக்கள் அளித்த அந்த மனுவின்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைய தினம் ஆளுகின்ற பொறுப்பிலே இல்லாமலிருந்தாலும்கூட, இந்த பிரச்சினையை ஆளுகின்ற பொறுப்பிற்கு வருகின்ற நேரத்தில் கவனிப்பேன் என்ற உறுதியினை அளித்ததற்கேற்ப இன்றைக்கு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆவன செய்வதாக, 'சொன்னதைச் செய்வோம்' என்ற நிலைப்பாட்டிற்கேற்ப இங்கே சொல்லியிருப்பதற்குப் பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொண்டு வெகு விரைவில் ஓய்வுபெறக்கூடியோர் அந்த என்.எல்.சி.கார்ப்பரேஷனில் 3,000 பேர்களுக்கு மேல் இருப்பதாக தெரிய வருகிறது. அந்த 3,000 பேர்களுக்கு மேல் ஓய்வு பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிற நிலையில் இன்றைக்கே அந்தப் பணிகளுக்கான ஆட்களைத் தேர்வு செய்கின்ற நிலையில் வீட்டினுடைய உரிமையாளர்கள். நிலத்தினுடைய உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமையினை, தகுதி அடிப்படையிலே கொடுத்து, அவர்களைத் தேர்வு செய்து வைத்துக் கொள்கின்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், அந்த மக்களுடைய மனநிலையில் மிகப்பெரிய மகிழ்ச்சி நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையினை அரசு தன்னுடைய ஆலோசனையில் வைத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளித்த உறுதியின் அடிப்படையில் காலி செய்யப்படும் குடும்பங்களுக்கு உடனடியாக மாற்று மனை கொடுக்கவும், வேலை வாய்ப்புகளை அவர்களுக்குப் பெற்றுத் தரவும் நிவாரணங்கள் வழங்கவும் தொடர்ந்து நிர்வாகத்திடம் பேச்சு வார்த்தை நடத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரும் அந்தப் பணியை இப்போது செய்து வருகிறார். விரைவில் அரசு இதிலே தீவிர கவனம் செலுத்தி அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வரும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல், 1989-90ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். . . . .

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து—தொடர்ச்சி.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் ஊர்வலங்களும், உண்ணாவிரதங்களும் அனுமதிக்கப்பட்ட முறைகள். நேற்று மதுரையில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சேடப்பட்டி முத்தையா, திரு. ஐக்கையன் முன்னாள் எம். பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் போடி ராமதாஸ், சுப்பிரமணியம் ஆகியோர்களோடு இன்னும்